# வலயக் கல்வி அலுவலகம் – துணுக்காய்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2020 தரம் 10

| | | |
|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் I,II<br>Tamil Language & Lit. I,II | 22 T I,II | மூன்று மணித்தியாலம்<br>Three Hours |

### தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1.** "தண்டேன் நுகரா மண்டூகம்" – இங்கு **தண்** என்பதால் குறிக்கப்படுவது
1. இனிமை 2. வெம்மை 3. குளிர்ச்சி 4. தண்ணீர்

**2.** "கர்ணகை மச்சாள் என்மீது மிகுந்த அன்பு கொண்டவளாக விளங்கினாள்" – இங்கு **அன்பு** என்பதன் எதிர்ப்பதம்
1. மறம் 2. வன்பு 3. கனிவு 4. பாசம்

**3.** "உழவன் வயல் நோக்கி எருதுகளுடன் புறப்பட்டான்" – இங்கு **உழவன்** என்பதன் பெண்பாற் சொல்
1. உலத்தி 2. உழவி 3. உளத்தி 4. உழத்தி

**4.** "பிணக்கறுக்கும் மூத்தோரை இல்லா அவைக்களனும்" – இங்கு **பிணக்கம்** என்பதன் எதிர்ப்பதம்
1. நெருக்கம் 2. இணக்கம் 3. சுணக்கம் 4. துன்பம்

**5.** "என்னுடைய அண்ணனுக்கு எங்கோ ஓரிடத்தில் கலியாணம் பேசி முடித்துவிட்டாள் அம்மாள்" – இங்கு **கலியாணம்** என்பதற்கு நிகராக **வழங்கமுடியாத** ஒரு சொல்
1. விவாகம் 2. விவாதம் 3. திருமணம் 4. மணம்

**6.** பின்வருவனவற்றுள் ஒலியைக் குறிக்கும் மரபுச் சொற்களில் **பொருத்தமற்றது.**
1. யானை — பிளறும் 2. பன்றி — உறுமும்
3. எருது — களைக்கும் 4. பசு — கதறும்

**7.** "இவ்வருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் அழகியல்பாட மாணவர்களுக்காக **வேர்க்சொப்** ***(workshop)*** ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது." – இங்கு **வேர்க்சொப்** என்ற கலைச்சொல்லுக்கு நிகராக **வழங்கக்கூடிய** தமிழ்ப்பதம்
1. பயிலரங்கு 2. பரீட்சை 3. செயலமர்வு 4. கருத்துக்கணிப்பு

**8.** நிலத்தின் உரிமையைக் கொண்டாடுவதற்கு சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம்
1. ஆவணம் 2. கையுறை 3. உறுதி 4. அளவிடைப்படம்

**9.** கப்பலை செலுத்துபவன் மாலுமி என்பது போல, விமானத்தைச் செலுத்துபவன்
1. மீகாமன் 2. வலவன் 3. ஆயன் 4. ஓட்டுநர்

**10.** "ஏன் மேனே, நீ உன்ர மச்சாளிடம் பேசிறதில்லையாம்" – இங்கு **மேனே** என்ற பேச்சுத் தமிழை அதிகளவில் உபயோகிக்கும் மக்கள் சமூகம் வாழும் **பகுதி**

1. வடக்கு 2. தென்னிலங்கை 3. கிழக்கு 4. மலையகம்

**11.** "எத் துன்பம் வரினும் பெரியோர் தம்நிலை தவறார்" – இக் கருத்தை விளக்கப் பொருத்தமான **பழமொழி**

1. இட்டுக் கெட்டார் எங்குமில்லை
2. ஆனைக்கொரு காலம் பூனைக்கு ஒரு காலம்
3. தேயந்தாலும் சந்தனக்கட்டை தன்மணம் மாறாது
4. விண் இயங்கும் ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்.

**12.** **"உற்சாகமூட்டுதல்"** என்பதைக் குறிக்கும் **மரபுத்தொடர்**

1. தட்டிப்பார்த்தல் 2. தட்டிக்கொடுத்தல் 3. தட்டிப்பேசுதல் 4. தட்டிக்கழித்தல்

**13.** மகனை இழந்த தாய் மனமுருகுவதற்குப் பொருத்தமான **உவமைத்தொடர்**

1. அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல 2. ஏறாமடைக்கு நீர் பாய்ச்சினாற் போல
3. அக்கினியிற்பட்ட மெழுகு போல 4. வலையிற் சிக்கிய மான் போல

**14.** "ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை" – இங்கு இடம்பெறும் **உறு** என்பது

1. பெயர்ப்பகுபதம் 2. உரிப்பகாப்பதம் 3. வினைப்பகுபதம் 4. இடைப்பகுபதம்

**15.** "இடியோடு மழை பொழிந்தது" – இங்கு '**ஓடு**' உருபு பெற்று வந்த பொருள்

1. கருவி 2. கருத்தா 3. உடனிகழ்ச்சி 4. அடைமொழி

**16.** பின்வருவனவற்றுள் **அ – ஈ** வரையான சொற்றொகுதிகளில் அகராதி ஒழுங்கைத் திருத்தமாகக் காட்டிநிற்கும் **விடையொழுங்கு**

(அ) கடவுள் (ஆ) தகவல் (இ) சந்திரன் (ஈ) மங்களம்

1. அ, இ, ஆ, ஈ 2. அ, ஆ, ஈ, இ 3. ஆ, ஈ, இ, அ 4. ஆ, அ, இ, ஈ

**17.** "ஜனாதிபதியின் வருகையின் பொருட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது" – இங்கு இடம்பெறும் **சொல்லுருபு** எத்தனையாம் வேற்றுமைக்குரியதாகும்?

1. 2 ஆம் வேற்றுமை 2. 1 ஆம் வேற்றுமை
3. 4 ஆம் வேற்றுமை 4. 3 ஆம் வேற்றுமை

**18.** "அவருக்கு இந்த விடயம் பற்றி அரைகுறையாகத் தெரியும்" – இங்கு **அரைகுறை** என்பது

1. இரட்டைமொழி 2. இணைமொழி
3. அடுக்குமொழி 4. அடுக்கிடுக்குமொழி

**19.** கட்டுரை ஒன்றில் வாசகரின் அபிப்பிராயம் தீர்மானிக்கப்படும் பகுதி

1. முகவுரை 2. முன்னுரை 3. முடிவுரை 4. உடல்

**20.** வினைச் சொல்லொன்றில் காலம்காட்டும் உறுப்பாக **தொழிற்படுவது**

1. இடைநிலை 2. சந்தி 3. விகாரம் 4. சாரியை

**21.** நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை
அவரது பேச்சில் நியாயமிருந்தது – மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்க ரீதியில் இணைப்பதற்கு **மிகப் பொருத்தமான** இணைப்பிடைச்சொல்

1. ஆகையால் 2. ஏனெனில் 3. ஆனாலும் 4. எனவே

**22.** 'மிதமிஞ்சிய ஆசை ஆபத்தானது' – இங்கு **மிதமிஞ்சிய** என்பதற்கு **நிகரான** சொல்

1. முறைகேடான 2. அநீதியான 3. கணிசமான 4. அளவுக்கதிகமான

**23.** "ஆசிரியர் என்னை மன்னிப்பாரா? மன்னிக்க மாட்டாரா?" – இங்கு இடம்பெற்றுள்ள **இணைப்பிடைச்சொல்**

1. செய்ய 2. ஆ 3. ஆகவே 4. அல்லது


kalvi.lk

**24.** "நீயோ அவனோ நானோ யார் இதைச் செய்தார்?" - இவ் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வழுவமைதி வகையாக **அமைவது**

1. திணை 2. பால் 3. எண் 4. இடம்

**25.** "மிதிலை நகர் வாயிற்கொடிகள் இராம, இலக்குமணரை வாருங்கள் வாருங்கள் என அழைப்பன போல் அசைந்தன" - இங்கு இடம்பெற்றுள்ள **அணி**

1. உவமையணி 2. தற்குறிப்பேற்ற அணி 3. உருவக அணி 4. உயர்வுநவிற்சி அணி

**26.** **பசுமை** + **கிளி** என்பதைப் புணர்த்தி எழுதினால்

1. பசுமைக்கிளி 2. பசுங்கிளி
3. பசியகிளி 4.பைங்கிளி

**27.** பின்வருவனவற்றுள் உயர்திணையில் ஒரு பாலுக்கு **மாத்திரம்** உரித்தான சொல்

1. கூத்தாட்டி 2. பிரதிவாதி 3. மூதாட்டி 4. விருந்தாளி

**28.** பின்வருவனவற்றுள் எழுத்தப்பிழை **அற்ற** சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

1. நாகரீகம், பேரூந்து, விடையம் 2. அனாவசியம், அநாகரீகம், பேருந்து
3. பேருந்து, ஒட்டடை, பரியாரி 4. பேருந்து, நாகரிகம், பரிகாரி

**✹ பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறும் சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

**29.** 1. பெயர்ச்சொல் - கதிரை, மார்கழி, செம்மை
2. வினைச்சொல் - படி, அலை, நடை
3. உரிச்சொல் - சால, கூர், உறு
4. இடைச்சொல் - கள், ஆல், த்

**30.** 1. இயல்புப் புணர்ச்சி - தமிழ்மொழி, நீரோடை
2. தோன்றல் புணர்ச்சி - பூவரும்பு, மாங்கனி
3. திரிதல் புணர்ச்சி - கடலோரம், முட்செடி
4. கெடுதல் புணர்ச்சி - வனவிலங்கு, நீலமேகம்

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

கானெலாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து
குணதிசைத் தோன்றிற்றம்மா.

**31.** இப் பாடலில் வர்ணிக்கப்படுவது

1. காலைக் காட்சி 2. சந்திரோதயக் காட்சி
3. கானகக் காட்சி 4. சூரியோதயக் காட்சி

**32.** இப் பாடலில் உவமானங்களாகக் கையாளப்பட்டவை

1. முல்லை, கும்பம் 2. தாரை, மதியம்
3. முல்லை, தாரை 4. கும்பம், மதியம்

**33.** "தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிறம்மா" - இங்கு **குணதிசை** என்பது

1. வடக்கு 2. தெற்கு
3. கிழக்கு 4. மேற்கு

- **பின்வரும் வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

**34.** இயற்கை அனர்த்தம் தொடர்பான முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட, ஐவர் கொண்ட குழு அண்மையிற் கூடி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முக்கிய

1. முடிவெடுத்தனர். 2. முடிவெடுத்தது.
3. முடிவை எடுத்தது. 4. முடிவெடுத்தார்கள்.

**35.** வெள்ளம் போல மாணவர் கூட்டம்,

1. திரண்டனர். 2. திரண்டது.
3. திரண்டார்கள். 4. திரண்டன.

**36.** அயராது முயற்சி செய்பவர்களாலேயே வாழ்க்கையில் முன்னேற்றம்,

1. காண்பார்கள். 2. காணமுடியும்.
3. காணமுடியாது. 4. கண்டார்கள்.

- **புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.**

**37.** ஒரு வழக்கின் எதிர் வழக்காளி ..........................எனப்படுவார்.

1. பிரதிவாதி 2. குற்றவாளி
3. வழக்குவாதி 3. எதிர்வாதி

**38.** காலபோக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு உரத்திற்கான ....................வழங்கப்பட்டது.

1. நட்டஈடு 2. பங்கீடு 3. மானியம் 4. நன்கொடை

**39.** அந்த நூல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ............................ பெரும் சலசலப்பு ஏற்படுத்தியது.

1. பாயிரம் 2. அணிந்துரை 3. விளம்பரம் 4. விமர்சனம்

**40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.**

(அ) இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிதைக்கு வசந்தகாலம்.

(ஆ) இவனே இந்த வசந்தத்தின் முதல் பூப்பாகவும், முதல் குயிலாகவும் இருந்தான்.

(இ) இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்த வசந்தத்தைப் பாடும் குயிலாக பாரதியின் குரல் ஒலித்தது.

(ஈ) இந்தக்காலத்தில் வடிவத்திலும், வண்ணத்திலும், வாசத்திலும் வகை வகையான புதிய கவிதைப்பூக்கள் தமிழில் மலர்ந்தன.

1. அ, இ, ஆ, ஈ 2. அ, ஈ, இ, ஆ
3. அ, இ, ஈ, ஆ 4. ஈ, அ, இ, ஆ

**(40 புள்ளிகள்)**

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

* இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரைச் **சந்திபிரித்து** எழுதுக.
   குழம்பிய அழுக்கடைந்திடவும் புறங்கிடந்து

2. பின்வருவனவற்றுள் கட்டுரையொன்றில் **தவிர்க்கப்படவேண்டிய** விடயங்களை **மாத்திரம்** தெரிந்தெடுக்குக.
   கூறியது கூறல் — நவின்றோர்க்கினிமை
   நன்மொழி புணர்தல் — குன்றக் கூறல்

3. "அதிகாலைப் பொழுதில் நாய்கள் குரைத்தது" — மேற்படி வாக்கியத்திலுள்ள மயக்கத்தை இனங்கண்டு **திருத்தி** எழுதுக.

4. "வான நெடுங்கடலிடை வெள்ளி ஓடமெனத்
   திகழ் வெண்ணிலா சந்தியா காலத்தில்"
   (அ) இத் தொடரில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
   (ஆ) இங்கு **சந்தியாகாலம்** என்பது எப்பொழுதைக் குறிக்கின்றது?

5. பின்வரும் பேச்சுநிலைத்தொடரை **எழுத்துநிலைத்** தொடராக எழுதிக்காட்டுக.
   "இனிமேல் உம்மட தேத்தண்ணி குடிக்க மாட்டன்"

6. சுருக்கம் எழுதப்படும் சந்தரப்பங்கள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

7. **சமுகம், சமூகம்** ஆகிய சொற்களை வைத்து பொருள் புலப்படும் விதத்தில் **தனித்தனி** வாக்கியங்களாக எழுதிக்காட்டுக.

8. பின்வரும் தனிவாக்கியங்களை இணைத்து தொடர் வாக்கியமாக்குக.
   * கிளர்ச்சிக்காரர் கிரெம்ளின் நோக்கி அணிவகுத்துச் சென்றார்கள்.
   * அவர்கள் பச்சைநிறச் சட்டை அணிந்திருந்தார்கள்.

9. "அதற்கிடையில் என்னுடைய அண்ணை உபாத்திமைத் தொழிலிலிருந்து ஏதோவொரு சோதனை பாஸ் பண்ணி ஒரு அதிகாரப் பதவிக்குப் போய்விட்டார்" - இங்கு
   (அ) உபாத்திமை
   (ஆ)சோதனை என்பவற்றுக்கு **நிகராகத்** தமிழில் வழங்பெறும் **ஒவ்வொரு** சொற்களைக் குறிப்பிடுக.

10. "வெட்டி எறிந்த நகம் போல விளங்கும் மூன்றாம் பிறை" — மேற்படி தொடரில் இடம்பெற்றுள்ள **அணி**யை குறிப்பிட்டு விளக்குக.

**(20 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන

**2. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாள 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

**(அ)** வன வளங்களும், வன ஜீவராசிகளும் இயற்கையால் எமக்களிப்பட்ட கொடைகள் எனலாம். அண்மைக்காலமாக காடழிப்பு என்பது ஒரு தொடர்கதையாகிப் போயுள்ள நிலையில், தற்போது அதன் அழிவில் இயற்கையும் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றது. அமேசனில் தொடங்கி அவுஸ்ரேலியா வரை வனவளமும், வன ஜீவராசிகளும் தீயிற்கு இரையாகிக் கொண்டிருக்கின்றமை நாம் அறிந்ததொன்றே. வன வளங்களின் முக்கியத்துவம் மற்றும் அதனைப் பாதுகாககும் வழிமுறைகள் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய ஓர் **விளக்கக் கட்டுரை.**

**(ஆ)** கணனி இணையம் என்பன இன்று மனித வாழ்விற்கு மிக இன்றியமையாத பல தேவைகளையும், சேவைகளையும் வழங்கி வருவதைக் காணலாம். அதே நேரம் எதிர்மறையான தன்மைகளையும் விளைவுகளையும் இவை கொண்டிருக்கவும் தவறவில்லை. இது தொடர்பாக பாடசாலைக் காலைக் கூட்டத்தில் நீர் ஆற்றிய **சொற்பொழிவு.**

**(இ)** வாசிப்பு என்பது தற்காலத்தில் அருகிவரும் ஒரு பழக்கமாக மாறிவிட்டது. பண்டைய காலத்தில் வாசிப்பு என்பது முக்கியத்துவம் பெற்று விளங்கிய போதிலும், தற்கால சமுதாயமானது வாசிப்பை புறந்தள்ளிவைக்கின்றது. ஒரு மனிதனை பூரணப்படுத்துவது வாசிப்பு என்பதை நாம் அறியாது, தேவையற்ற விடயங்களில் எமது கவனங்களை செலுத்தி தவறான பாதையில் எம்மை நாமே வழிநடத்திச் செல்கின்றோம். இது பற்றி இரு நண்பர்களுக்கு இடையில் இடம்பெற்ற **உரையாடல்.**

**(ஈ)** இன்று அந்தத் தாய் முதியோர் பராமரிப்பு விடுதியொன்றில் அடைக்கலமாகியுள்ளாள். இத்தனைக்கும் அவள் ஏழையல்ல. அவளது பிள்ளைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல நிலையில் உள்ளனர். ஆனாலும் அந்தத் தாயை அருகிலிருந்து பராமரிக்க இன்று யாருமில்லை. ஆனால் அவளோ தனது பிள்ளைகளின் நலனுக்காக இன்னும் பிரார்த்தனை செய்கின்றாள். ஏனெனில் அவர்களை ஆளாக்க அவள் பட்டபாடு அப்பப்பா கொஞ்சநஞ்சமல்ல! என்ற கருப்பொருளில் அமைந்த ஒரு **சிறுகதை.**

**(25 புள்ளிகள்)**

**3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

தமிழ் மொழியைப் போல் இனிமையான மொழியை எங்கும் காணவில்லை. அத்தகைய இனிய தாய்மொழியை நாம் விரும்பிப் படியாது அறிவீனராய் வாழ்கின்றோம். இதனால் உலகத்தவர் எம்மை மடையர் என்றும் மிருகங்கள் என்றும் பரிகசிக்க, நாமோ நம்மைத் தமிழன் என்று கூறிக்கொண்டிருத்தல் சரியன்று. தேன் போல இனிக்கும் தமிழை நாமும் கற்று, பிற சாதியினரும் அறியும்படி பரப்புதல் வேண்டும்.

ஆங்கிலேயம், பிரெஞ்சு முதலிய அந்நிய நாடுகளின் சிறந்த அறிஞர்கள் எழுதிய கலை நூல்களை நாம் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும். அழியாப் புகழ் படைக்கும் அருமையான புதிய நூல்களைத் தமிழ் மொழியில் எழுத வேண்டும். நமது கலைச் செல்வங்கள் உயர்ந்தவை என்பது உண்மையானால், பிறநாட்டு மக்களும் அவற்றைச் சுவைத்துப் போற்ற வேண்டும். உலகமெல்லாம் தமிழ் பரவ வேண்டும். நம் முன்னோர் தந்த காப்பியங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்ற இலக்கியங்களைப் பாதுகாப்பதோடு அவற்றைச் சிறுபராயத்திலிருந்தே வாசிக்கத் தூண்ட வேண்டும். ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாக மாற்ற வழிகாட்ட வேண்டும். நம் முன்னோர்களின் வீரம், புகழ், பெற்றோர் பாசம், சகோதர பாசம், விருந்தோம்பல் பண்பு என்பன எவ்வாறு காணப்பட்டன என்பதை இனிவரும் சமூகத்திற்குக் கூற வேண்டும். எம் பரம்பரைச் சொத்தான இலக்கியங்களை அறிவதன் ஊடாக, பெற்றுக்கொள்ளும் அறிவினையும் தெரியப்படுத்த ண்டும். தமிழின் இனிமையை நுகர்வோம் பலன்பெறுவோம்.

**(10 புள்ளிகள்)**

**4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.**

அவைக்களத்துச் சொல்லுதற்குரிய வரம்பின் அமைந்த ஆங்கில மொழியினை "வேந்தன் மொழி" என அம்மொழிப் புலவர் விதந்து கூறுவர். அப்படியே யாமும் அவைக்களத்திற் சொல்லுதற்குரிய வரம்பின் அமைந்த தமிழினை "பாண்டியன் தமிழ்" என்போம். எது தமிழ் என வினாவுவாருக்கு பாண்டியன் தமிழே தமிழ் என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது. அறிஞர் போற்றுதற்குரியது. பொருள் வருவாயொன்றினையே கருதி மனம் போனவாறு மரபு தவறி எழும் மொழி வழக்கானது மழைக்காலத்திலே தோன்றி, அக்காலங்கழிய மறைந்து போகின்ற சிறு பூண்டுகளைப் போல் நிலைபேறில்லாதது. நிலைபேறுடைய உண்மை, அழகு, செம்மை எனும் இவைதனையே அறிஞரது உள்ளம் என்றும் அவாவி நிற்கும். முத்தமிழின் இயற்றமிழானது உண்மையினையும், இசைத்தமிழானது அழகினையும், நாடகத்தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டுவன. பேருண்மையும் பேரழகும் வரம்பு கடந்த செம்மையும் இறைவனுக்குரிய குணங்களாக சமய நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவைதம்மை வெளியிட்டுரைக்கும் ஆற்றலுடையமையினாலேதான் மொழிகள் தெய்வத்தன்மை உடையனவாகக் காணப்பட்டன.

(அ) **"வேந்தன் மொழி", "பாண்டியன் மொழி"** எனப் போற்றப்படுபவை எவை?

(ஆ) மரபுதவறி எழுதும் மொழிவழக்கு எதைப்போன்றது என ஆசிரியர் விவரிக்கின்றார்?

(இ) அறிஞரது உள்ளம் அவாவி நிற்கும் விடயங்கள் எவை?

(ஈ) மொழி தெய்வத்தன்மை உடையது என்பதற்கு ஆசிரியர் கூறும் விளக்கங்கள் எவை?

(உ) **முத்தமிழ்** எனப்படுவது உணர்த்துவது எவற்றை?

**(10 புள்ளிகள்)**

**5.** தனது பாடத்தைக் கற்பதில் நேரத்தைச் செலவு செய்வதிலும் பார்க்க முகப்புத்தக **(Facebook)** நண்பர்களுடன் அரட்டை **(Chat)** செய்வதில் அதிக நேரத்தைச் செலவு செய்யும் உமது நண்பன் **அல்லது** நண்பி ஒருவருக்கு அறிவுரை கூறி **100** சொற்களில் அமையுமாறு ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

உமது பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் மின்சார வெட்டின் காரணமாக கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்தும், அதற்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரியும் பிராந்திய மின்சார சபை பொறியியலாளர் அவர்களுக்கு **100** சொற்களில் அமையுமாறு ஒரு **கடிதம்** எழுதுக.

**(15 புள்ளிகள்)**

* * *

# வலயக் கல்வி அலுவலகம் – துணுக்காய்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2020 தரம் 10

| | | |
|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் Tamil Language & Lit. | 22 T | இரண்டு மணித்தியாலம் Two Hours |

### தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**
* அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.
* **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**1.** பின்வரும் தொடரைச் **சந்திபிரித்து** எழுதுக.
புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்

**2.** "உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல்..."
(அ) இங்கு **அறுசுவை** உணவாகக் கருதப்படுவது எது?
(ஆ) **'தப்பிய கந்தை'** என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**3.** "விலகு பிள்ளை... அது கிடக்க எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை"
(அ) மேற்படி கூற்று யாரால் கூறப்பட்டதாகும்?
(ஆ) **'பிள்ளை'** என்று இங்கு குறிப்பிடப்படுபவர் யார்?

**4.** "...கணக்காய ரில்லாதவூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும்...."
(அ) **'கணக்காயர்'** என்று குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) **'பிணக்கறுத்தல்'** என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**5.** "கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பல கழித்திட்டனன்"
(அ) **'கோத்த சிந்தனை'** என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(ஆ) பல நாட்களை வீணே செலவுசெய்தவர் யார்?

**6.** "மாகம டங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்"
(அ) நாவலரது எழுச்சி ஒப்பிட்டுக்காட்டப்படும் **இதிகாசப் பாத்திரம்** எது?
(ஆ) பின்வருவனவற்றுக்குப் பொருளுரைக்குக. **1.** மடங்கல் **2.** பொன்னாகம்

**7.** "உப்பில்லாக் கஞ்சியினை..."
(அ) மேற்படி பாடல் இடம்பெறும் **நூல்** யாது?
(ஆ) இந் நூலின் **ஆசிரியர்** யார்?

**8.** "வேரெடுத்து சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல்..." — இப் பாடலில் இடம்பெற்றுள்ள **அணி**யை இனங்கண்டு விளக்குக.

**9.** **"நீதிப்பாடல்கள்"** என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

10.“கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணிலாதவர் போலத் திகைப்பர்” – இங்கு
(அ) கண்ணிலாதவர் எனக் குறிப்பிடப்படுவர் யார்?
(ஆ) **கதி** என்பதன் பொருள் யாது?

**(20 புள்ளிகள்)**

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் – யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.
(அ) இச் செய்யுளில் கூறப்படும் பிரதான கருத்து யாது?
(ஆ) அது எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

2. புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துள்ளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.
(அ) மானிடர் விரும்பியவற்றை அடையும் வழிவகை எவையென ஞானியர் குறிப்பிடுகின்றனர்?
(ஆ) **‘விலங்கியற்றை’** என்ற தொடரின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

3. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே.
(அ) அறிவுடையோர், அறிவற்றோரின் இயல்புகளை எடுத்துக்காட்டுக.
(ஆ) கையாளப்பட்டுள்ள உவமைச் சிறப்பைத் துலக்குக.

4. காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார் ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித் திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்.
(அ) தான் அனுபவித்தவையாக பாரதி குறிப்பிடுவனவற்றை எடுத்துக்காட்டுக.
(ஆ) பெண்ணின் மீது பாரதி கொண்ட அளவற்ற காதல் வெளிப்படுமாற்றை விளக்குக.

5. வாதத்துக்கென்று வந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகையின்றி தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக்கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து ‘பிறிற்றோ தக்கவர் அல்லர்’ என்று தாமே சொல்லிச் சமாதானப்பட்டுக்கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிரிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது.

(அ) கூட்ட மண்டபத்தில் உண்டான மாற்றத்தை கட்டுரையாசிரியர் எவ்விதம் எள்ளி நகையாடுகின்றார்?

(ஆ) பிரிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றமைக்கான காரணம் யாது?

**(20 புள்ளிகள்)**

**3.** **பாரதியார் – சுயசரிதை** பாடப் பகுதியில் பாரதியின்,

(அ) காதலுணர்வு

(ஆ) இலக்கிய ஆளுமை என்பன வெளிப்படுமாற்றை ஆராய்க.

***அல்லது***

**நாவலர் எழுந்தார்** எனும் கட்டுரையின்,

(அ) மொழிநடை

(ஆ) இதிகாசச் சித்திரிப்பு என்பன வலியுறுத்தப்படுமாற்றை தெளிவுறுத்துக. **(15 புள்ளிகள்)**

**4.** (அ) "தண்டா மரையினுடன்…" **(விவேகசிந்தாமணி)**

(ஆ) "தேம்படுபனையின் திரள்…" (வெற்றிவேற்கை)

– ஆகிய பாடல்களில் **முறையே** மண்டுகம் – வண்டு என்பவற்றின் இயல்புகளும், பனை – ஆலமரம் என்பவற்றின் இயல்புகளும் எடுத்துரைக்கப்படுமாற்றை ஆராய்க.

***அல்லது***

**நீதிப்பாடல்களில்,**

(அ) "மூதுரை" கூறும் **அடக்கம்**

(ஆ) "நாலடியார்" கூறும் **நட்பு** என்பவற்றை விளக்குக. **(15 புள்ளிகள்)**

- **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**5.** **நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரை வாயிலாக நாவலரின் நேர்மையும், பிறிற்றோவின் நேர்மையீனமும் எடுத்துரைக்கப்படுமாற்றினை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

**6.** **பாரதியார் – சுயசரிதை** எனும் பாடப்பகுதியில்,

(அ) விரும்பியவற்றை அடையாதவர்களின் இயல்புகள்

(ஆ) உவமைச் சிறப்பு என்பவற்றை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

**7.** "அணிகளைக் கையாள்வதில் பண்டைக்காலப் புலவர்கள் வல்லவர்கள்" – நீர் படித்த எவையேனும் **இரண்டு** நீதிப்பாடல்களை அடியொற்றி இக்கூற்றைப் பரிசீலிக்குக. **(10 புள்ளிகள்)**

* * *

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Kalvi.lk

Whatsapp 075 287 1457